[2009 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அது இரு மாநிலங்களிலேயும் ஓடுகிற நதி. Inter State River. எனவே, அங்கு அணை கட்டவேண்டுமானால், *1882* ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி நமக்கு எல்லாவிதமான materials–ஐயும் supply செய்து, நாம் பரிசீலித்த பிறகுதான் அவர்கள் கட்ட வேண்டும். அதையும் மீறி கட்டினால், இப்போது எப்படிப் பாலாற்றிலே கட்டுவதற்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறோமோ அதே நிலையை அரசு எடுக்கும்.

(உ) நம்பியாற்றின் குறுக்கே மைலாப்புதூரில் உள்ள உடைந்த அணையை மீண்டும் கட்டித் தரக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டப் பகுதி வழியாகச் செல்லும் நம்பியாற்றின் குறுக்கே இருந்த மைலாப்புதூர் அணைக்கட்டு, *2005* ஆம் ஆண்டு உடைந்துவிட்டதால், மீண்டும் அணையைக் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, விதி *55*–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

நண்பகல் 12–00

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞருடைய நல்லாட்சியில்தான் வறண்ட நாங்குநேரி, ராதாபுரம் வழியாகச் செல்கின்ற நம்பியாற்றின் குறுக்கே அணையைக் கட்டி, அக்டோபர் இரண்டாம் தேதி, 2000 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களே, தன்னுடைய திருக்கரத்தினால் நேரடியாக அந்த அணையைத் திறந்து வைத்தார். அதே தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்தான், தாமிரபரணி ஆற்றின் வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரும் அந்தப் பகுதிக்கு வர வேண்டும் என்பதற்காக, இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு முன்மாதிரித் திட்டமாக, வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு வருவதற்காக, நதிநீர் இணைப்புத் திட்டத்தைத் தந்து, அதற்கு நிதியையும் ஒதுக்கி, கடந்த 21 ஆம் தேதி Video Conferencing மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு அர்ப்பணித்தார். அதற்காக தலைவர் கலைஞரோடு முழுமூச்சாகச் சிறப்பாகப் பணியாற்றிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே

நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வறண்ட ராதாபுரம், நாங்குநேரி வழியாக வருகின்ற இந்த நம்பியாற்றின் குறுக்கே — நம்பியாற்றில் அணைக்கட்டுக்கு சற்று 7, 8 கி.மீ.-க்கு மேலே — மைலாப்புதூர் என்ற ஓர் அணைக்கட்டு இருந்தது. அந்த அணைக்கட்டு 2005 ஆம் ஆண்டு ** அந்த அணை உடைந்து விழுந்துவிட்டது. அந்த அணை விழுந்துவிட்ட காரணத்தை நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞருடைய ஆட்சி காலத்தில் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததும், அந்த அணைக்கட்டு மூலம் துலுக்கப்பட்டி குளம், ஆனைகுளம், தங்கையங்குளம், விள்ளவனம்புதூர் குளம் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற அந்தக் குற்றச்சாட்டு அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கூட்டத் தொடரின் கடைசி நாள். பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் முடிப்பதற்கு தாங்கள்தான் அவையை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: கவன ஈர்ப்புத் தீர்மானம் எதன்பேரில்?

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கால் குளம், அதேபோன்று வீற்றிருந்தான்குளம், ஐயப்பநேரி குளம், சோம்பக்கால் குளம் ஆகிய 8 குளங்கள் வழியாக, 166 எக்டேர் நிலப்பரப்பு பாசனம் பெற்று வந்தது. கடந்த 4 ஆண்டுக் காலமாக அந்த அணை உடைந்த காரணத்தினால், அந்தக் குளப் பகுதிகள் வறண்டு போய் அந்த நிலங்களும், பயிர் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. அந்தக் குளங்கள் பெருகாததால், அதைச் சுற்றியிருக்கின்ற, கிணற்றுப் பாசனம் பெறுகின்ற 85 எக்டேர் நிலமும் பாசனம் பெறுகின்ற வாய்ப்பை இழந்திருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 432 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மதிப்பீடு தயாரித்து, அதிலே வரைபடம் சற்றுத் தவறாக இருக்கிறது என்பதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டு, மீண்டும் 762 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. பகுதி-2 திட்டத்திலோ அல்லது ஏதேனும் ஒரு சிறப்பு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மு. அப்பாவு] [2009 பிப்ரவரி 26

நிதியிலாவது இந்த ஆண்டே அந்த அணையைக் கட்டி அந்த 8 குளங்களும் பாசனத்திற்கு நீர் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று சொல்லி நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலமுறை இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே நேரிலே தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுக் காலம் கடந்தோடி விட்டது. அந்தப் பகுதி மக்கள், விவசாயிகள் எல்லாம் மிக வேதனையோடு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே கட்டி முடிக்கப்படும் என்று சொல்லி, எங்களுக்கு ஒரு ஆறுதலான பதிலை இந்த அவையிலே தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் தலையை அசைத்து விட்டார், விடுங்கள்.

(ஊ) கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி உரிய இழப்பீட்டுத் தொகை இதுவரை வழங்கப்படாதது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் செ.ம. வேலுசாமி, ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் ஆகியோர்